
# Year 1 Phonics Screening Check

Information for parents and carers




# ஆண்டு 1 குரல்ஒலி திரையிடல் சோதனை

பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்

## குரல்ஒலி என்றால் என்ன?

குரல்ஒலி என்பது எழுத்துகளுக்கும் ஒலிகளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் மற்றும் இது வாசிக்கக் கற்றுக்கொள்வதில் முதன்மையானதாகும். சில பிள்ளைகள் வாசிக்கக் கற்றுக்கொள்வதில் சிரமப்படுகிறார்கள், எனவே இந்த பிள்ளைகளை விரைவாக அடையாளம் காண வேண்டியது அவசியம். இதன் மூலம், ஆசிரியர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட ஆதரவுதவியைத் திட்டமிடலாம்.

## ஆண்டு 1 குரல்ஒலி திரையிடல் சோதனை என்றால் என்ன?

ஆண்டு 1 குரல்ஒலி திரையிடல் சோதனை என்பது ஒரு குறுகிய மாநில அளவிலான மதிப்பீடாகும், இது உங்கள் பிள்ளை குரல்ஒலிகளில் எவ்வாறு முன்னேறுகிறார் என்பதை ஆசிரியர்களுக்குக் கூறுகிறது. இந்த திரையிடல் சோதனை உங்கள் பிள்ளை எப்படி வெவ்வேறு எழுத்து சேர்க்கைகளுடன் ஆங்கில வார்த்தைகளை வாசிக்க முடியும் என்பதைக் கவனிக்கிறது. உங்கள் பிள்ளை ஆசிரியருடன் அமர்ந்து 40 வார்த்தைகளை சத்தமாக வாசிக்கும்படி கேட்கப்படுவார். இந்த வார்த்தைகளில் 20 உண்மையான வார்த்தைகளும் 20 அர்த்தமற்ற வார்த்தைகளும் அடங்கும். மாணவர் அந்த வார்த்தையை முன்பு பார்த்த ஞாபகத்தை பயன்படுத்தாமல் ஒரு வார்த்தையைப் படிக்க அவர்களின் கலப்பு அறிவுத் திறனைப் பயன்படுத்த முடியுமா என்பதைப் பார்ப்பதே அர்த்தமற்ற வார்த்தைகளின் நோக்கமாகும். சோதனை பொதுவாக 5-7 நிமிடங்கள் எடுக்கும். உங்கள் பிள்ளை சிரமப்பட்டால், ஆசிரியர் சோதனையை நிறுத்துவார். இச்சோதனை உங்கள் குழந்தைக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தாத வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்கள் பிள்ளையின் கற்றலுக்குத் திட்டமிட உதவும் தகவலை உங்கள் பிள்ளையின் ஆசிரியருக்கு வழங்குவதே ஆண்டு 1 குரல்ஒலி திரையிடல் சோதனையின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு ஆசிரியரால் தனித்தனியாக மதிப்பிடப்படுவார்கள் மற்றும் அனைத்து ஆண்டு 1 மாணவர்களும் மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

## குரல்ஒலி ஏன் முக்கியமானது?

ஆங்கிலத்தில் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதற்கு குரல்ஒலி அறிவும் திறமையும் அவசியம். மாணவர்கள் வெற்றிகரமாகச் செயற்பட, தனித்தனி எழுத்துகள் அல்லது வெவ்வேறு எழுத்துச் சேர்க்கைகளால் குறிப்பிடப்படும் ஒலிகளையும், மேலும் இந்த ஒலிகளை ஒன்றிணைத்து வார்த்தைகளைப் படிக்கும் திறனையும் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். வாசிக்க ஆரம்பிக்கும் மாணவர்கள், வாசிப்பு ஓட்டம் மற்றும் உரையின் புரிதலுக்கு இடையூறு ஏற்படாத வகையில், விரைவாகவும் சரளமாகவும் வார்த்தைகளில் ஒலிகளை எவ்வாறு இணைப்பது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆண்டு 1 குரல்ஒலி திரையிடல் சோதனை தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் பாடசாலையைத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

## தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

பாடசாலையைத் தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதை தொலைபேசி இயக்குநரிடம் சொல்லி , பாடசாலையை அழைக்குமாறு அவரிடம் கேட்கவும். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.